# ICAR-வேளாண்மை அறிவியல் மையம்

கீழ்நெல்லி, திருவண்ணாமலை மாவட்டம்



## தேனீ வளர்ப்பு - சிறந்த சிறுதொழில்



தேனீக்கள் ஓர் அபூர்வமான, சுறுசுறுப்பான, அதிசயதக்க மற்றும் இயற்கையோடு இணைந்து வாழத் தெரிந்த பூச்சியினம். மனித இனத்திற்கு அடுத்தப்படியாக, உயிரியல் வல்லுநர்களால் அதிக ஆய்விற்கு உள்ளான இனம் தேனீ. தேனீக்களிடமிருந்து கடமை உணர்வு, அயராத உழைப்பு, தலைமைக்கு தலை வணங்கும் பண்பு, ஒற்றுமை, தொலை நோக்குப் பார்வை, சிக்கனம், சேமிப்பு மற்றும் சமுதாய ஒழுங்கு போன்ற பண்புகளை நம் மனித சமுதாயமும் கற்றுக்கொண்டு கடைப் பிடித்தால் மனித வாழ்வு சிறக்கும்.

### தேனீக்கள் தரும் பொருட்கள்

தேனீ வளர்ப்பதால் நமக்குத் தேன், தேன் மெழுகு, மகரந்தம், அரசப் பசை, தேனீ விஷம் போன்ற பொருட்கள் கிடைக்கின்றன. தேனீக்கள் மதுரத்தைத் தங்களின் எச்சிலில் உள்ள இன்வர்டேஸ் என்ற நொதிப் பொருளால் தேனாக மாற்றி அதில் உள்ள நீர் அளவைக் குறைத்து அடைகளில் சேமிக்கின்றன. நம் நாட்டில் தேன் மருந்தாக 7 கிராம் மட்டுமே அதிகம் பயன்படுகின்றது. ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் ஆண்டொன்றுக்கு தனி நபர் அருந்தும் தேன் அளவு 1000 கிராம். தேன் ஒரு அற்புதமான சத்து நிறைந்த உணவு. இதற்கு நிகரான உணவு இன்னும் இயற்கையில் படைக்கப்படவில்லை. தேனைத் தொடர்ந்து அருந்தினால் தேகவலுவும் நீண்ட ஆயுளும் கிடைக்கும். அடைகளை உருக்கிக் காய்ச்சித் தேன் மெழுகு எடுக்கப்படுகின்றது. தேன் மெழுகிலிருந்து 250 வகையான பொருட்கள் கிடைக்கின்றன.

தேனீப் பால் எனப்படும் அரசக் கூழ் தாதித் தேனீக்களால் சுரக்கப்பட்டு இளம் புழுக்களும் ராணித் தேனீக்கும் உணவாக வழங்கப்படுகின்றது. இது இளமையுடன் இருக்கவும், வாழுங்காலத்தை நீட்டிக்கவும், பூரண உடல் மற்றும் மன உளைச்சலிலிருந்து விடுதலை தரும் பொருளாகவும் பயன்படுகிறது.

தேன் பிசின் என்பது ஒரு வகைத் தாவரப் பிசின், குறிப்பாக இத்தாலியத் தேனீக்கள் இதனை அதிக அளவு சேகரிக்கின்றன. இது மருத்துவ குணம் உள்ளது. இது பாக்டீரியாக்களையும் பிற கிருமிகளையும் கொல்லவல்லது. தேனீக்கள் கொட்டும் போது தேனீ விஷம் உட்செலுத்தப்படுகின்றது. தேனீ விஷம் முடக்கு வாதம், மூட்டு வலி, தசை வலி மற்றும் நரம்பு நோய்களைப் போக்கவல்லது. இதனால்தான் பொதுவாகத் தேனீ வளர்ப்போர் இத்தகைய நோய்களுக்கு ஆளாவதில்லை.

### தேனீக்களும் பயிர் மகசூலும்

தாவர இனவிருத்திக்குத் தேனீக்கள் ஆற்றும் பங்கு அளப்பரியது. மலருக்கு மணம் முடிக்கும் மகத்தான பணியைத் தேனீக்கள் செய்கின்றன. தேனீக்களைக் கவர்ந்து இழுக்கவே மலர்கள் நிறமும், மணமும் பெற்றுள்ளன. மேலும், மலர்களை நாடி வரும் தேனீக்களுக்கு மதுரத்தையும், மகரந்தத்தையும் உணவாகக் கொடுக்கின்றன. தேனீக்கள் மகரந்தத்தைத் தங்கள் உடம்பில் சுமந்து சென்று பயிரில் அயல் மகரந்தச் சேர்க்கையில் பங்கெடுப்பதால் 25-30 சதம் கூடுதல் மகசூல் கிடைக்கின்றது. குறிப்பாக எண்ணெய் வித்துக்கள், பழப் பயிர்கள், காய்கறிப் பயிர்கள் ஆகியவற்றின் மகசூல் அதிகரிக்கின்றது. ஆதலால்தான் தேனீக்கள் உழவர்களின் உற்ற நண்பர்கள் என்றும் உழவுத் தொழிலிற்கு உறுதுணை செய்யும் தேவதைகள் என்றும் போற்றப்படுகின்றன.

### கிராமத் தொழில்

தேனீ வளர்ப்பு ஒரு சிறந்த லாபகரமான கிராமத் தொழில். இதன் மூலம் குறைந்த முதலீட்டில் அதிக வருமானம் பெறலாம். தேனீ வளர்ப்பிற்கு தேவைப்படும் கச்சாப்பொருட்களான மதுரமும், மகரந்தமும், இயற்கையில் இலவசமாகத் தாவரங்களிடமிருந்து கிடைக்கின்றது. தேனீ வளர்க்க அதிக உடல் உழைப்பும் மற்றும் நேரச் செலவும் தேவையில்லை. குறைந்த முதலீடு போதும். தேனீ வளர்ப்பு மனச் சோர்வை நீக்கி மனதிற்கு மகிழ்ச்சியையும், ஆத்ம திருப்தியையும் தரும். எனவே நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களும் இத்தொழிலில் ஈடுபடலாம். தேனீ வளர்ப்பினால் சுய வேலை வாய்ப்பும், பகுதி நேர வேலை வாய்ப்பும் கிடைக்கிறது. எனவே, வேலையில்லா திண்டாட்டம் குறையவும் வாய்ப்பு உள்ளது. இதனால்தான் நம் தேசப்பிதா காந்தியடிகளும், கிராமப் பொருளாதார வளர்ச்சிக்குத் தேனீ வளர்ப்பை ஊக்குவிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். சில ஆதிவாசி இனத்தவர்கள் தேனீக்களை மட்டுமே நம்பி வாழ்கின்றனர். கிராமப் பெண்களும் தேனீ வளர்ப்பு மூலம் பணம் சம்பாதிக்கலாம். ஆகவே கிராம சமூக வளர்ச்சிக்கும் தேனீ வளர்ப்பு உதவும்.

### உப தொழில்

இந்தியாவில் தேன் உற்பத்தி ஆண்டு ஒன்றுக்கு 60000 டன் மட்டுமே. நம் நாட்டில் உள்ள தாவர வளத்துடன் இதை ஒப்பு நோக்கும் போது இது மிகக் குறைவு. தேசிய விவசாயக் ஆணையம் சமீபத்திய ஆய்வில் இந்தியாவில் 150 மில்லியன் தேனீக் கூட்டங்களை வளர்த்து, தேன் மகசூலை 1.5 மில்லியன் டன்னாக உயர்தவும், 1.5 மில்லியன் பேருக்கு பகுதி நேர வேலை வாய்ப்பு ஏற்படுத்தவும் இயலும் என்று கண்டறிந்துள்ளது. தேனிற்காக மட்டுமல்லாமல், தேனீக்கள் தரும் பிற பொருட்களுக்காகவும், பயிரில் மகரந்த சேர்க்கை ஏற்படுத்தவும் தேனீ வளர்ப்பை மேற்கொண்டால், இத்தொழில் அதிக பலன் கொடுக்கும். உழவர்கள் தேனீ வளர்ப்பை பிற பயிர் சார்ந்த தொழில்களுடன் ஒருங்கிணைந்துக் கடைபிடித்து உயர் மகசூல் பெறலாம்.

---

**வெளியீடு**

**வேளாண்மை அறிவியல் மையம்,**
**கீழ்நெல்லி, சித்தாத்தூர் அஞ்சல், வெம்பாக்கம் வட்டம்,**
**திருவண்ணாமலை மாவட்டம் - 604410.**
**தொலைபேசி : 04182 – 201525, 293484,**
**மின்னஞ்சல் : kvktvmalai91@gmail.com**
**வலைதளம் : www.kvkthiruvannamalai.com**

தல் செய்யப்பட்டுள்ளார்.



### சதுப்பேரிபாளையம் கிராமத்தில்

# உலக தேனீ தின பயிலரங்க கூட்டம்

ஆரணி, ஆக.20–

உலக தேனீ தினத்தையொட்டி ஆரணியை அடுத்த சதுப்பேரிபாளையம் கிராமத்தில் கீழ்நெல்லி வேளாண் அறிவியல் மையம் சார்பில், விவசாயிகள், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள், உழவர் உற்பத்தியாளர்கள் ஆகியோருக்கு தேனீ வளர்ப்பு முறைகள் குறித்த பயிலரங்க கூட்டம் நடந்தது.

வி.நாராயணன் தலைமை தாங்கி பேசினார். தொழில் நுட்ப அலுவலர் வெ.சுரேஷ் வரவேற்றார். தேனீ வளர்ப்பில் அறிவியல் மையத்தின் மூலம் உற்பத்தி அதிகரித்து லாபம் பெறுவது குறித்து பயிற்சியாளர்கள் ரமேஷ்ராஜா, மார்கரேட், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உதவி பேராசிரியர் ஸ்ரீராமஜெயம், டி.வி.எஸ். தொண்டு நிறுவன கள மேலாளர் அகிலன், தொழில் நுட்ப அலுவலர் ராஜேஷ் உள்பட பலர் கலந்து கொண்டு விளக்கம் அளித்தனர். பயிலரங்க கூட்டத்தில் 150–க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.